செ.வெ.எண்.243 நாள்.13.04.2018.

திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்–அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் திருக்குடமுழுக்கு திருநாள் தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் திருக்குடமுழுக்கு திருநாள் தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.04.2018) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் திருக்குடமுழுக்கு திருநாள் 27.04.2018 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு மேல் 10.25க்குள் திடக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது. 24.04.2018 அன்று மாலை முதல் யாகசாலை பூஜைகள் நடைபெறவுள்ளது. திருக்குடமுழுக்கு நடைபெறும் அன்று பொதுமக்களுக்கு இடையூரின்றி வாகன போக்குவரத்து வசதியினை சீர்செய்ய தகுந்த ஏற்பாடுகளை காவல் துறையினர் செய்திட வேண்டும். மேலும், பொதுமக்கள் அதிகமான அளவில் கோவிலுக்கு தரிசனம் செய்ய வருவதால், சட்டம்–ஒழுங்கினை பாதுகாத்திடும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திட வேண்டும். தீயணைப்புத் துறையினர் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் உபகரணங்களுடன் போதிய அளவில் தீயணைப்பு வீரர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும். திருநாளான்று தங்கு தடையில்லா மின்சாரத்தினை, மின்சார வாரியம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும், திருநெல்வேலி மாநகராட்சி சார்பாக திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு போதிய சுகாதாரம், தற்காலிக கழிப்பறை மற்றும் நான்கு ரதவீதிகளில் தேவையான குடிநீர் வழங்கிட ஏற்பாடுகளை செய்திடவும், குப்பை மற்றும் கழிவுகளை உடனுக்குடன் அகற்றிட அதிகளவில் துப்புரவு பணியாளர்களை நியமித்திட வேண்டும்.

திருக்குடமுழுக்கு அன்று சுகாதாரத் துறை மூலம் 108 அவசர கால ஊர்தி மற்றும் நான்கு ரதவீதிகளில் நிலையான மருத்துவக்குழுவுடன் தேவையான மருத்துவ உபகரணங்களை தயார் நிலையில் வைத்திட வேண்டும். திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திரளாக திருக்குடமுழுக்கு விழாவிற்கு அதிகளவில் வருகை தருவார்கள். எனவே, அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்குடமுழுக்கு விழாவிற்கு அனைத்து பகுதிகளிலிருந்து வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான சிறப்பு பேருந்துகளை, போக்குவரத்து துறையினர் இயக்கிட வேண்டும். திருக்கோவிலினை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள அரசு மதுபானக் கடைகள் திருக்குடமுழுக்கு நடைபெறும் நாட்களில் விடுமுறை அளிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்கள் அனைவரும் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் திருக்குடமுழுக்கு சிறப்பாக நடைபெற மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.மா.கணேஷ்குமார், (வளர்ச்சி பிரிவு) திரு.முத்து இளங்கோவன், (நிலம்) திரு.சா.ராமசுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.பரஞ்சோதி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, திருநெல்வேலி நகர காவல் உதவி ஆணையர் திரு.மாரிமுத்து, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்– அருள்தரும் காந்திமதி அம்மாள் திருக்கோவில் செயல் அலுவலர் திருமதி.பா.ரோஷினி, உள்பட காவல்துறை அலுவலர்கள் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.